


மக்களின் நன்மதிப்பை பெற்ற

தவத்திரு மகாசித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தகோடி பெருமக்களை அன்புடன் அழைக்கிறோம்.

செல்: 9025161717

ராம் சாய் ஹோட்டல்

(சைவம்)









எங்களிடம் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில் சைவ உணவுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

G.H. ரோடு மற்றும் கேணிக்கரை, இராமநாதபுரம்.

aanmeegamalar.com

# மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் விரும்பிய மூலக்கரை



கட்டி குளம் சூட்டுக் கோல் மகாசித்தர் மாயாண்டி சுவாமிகளின் ஆன்மா ஜோதியில் கலந்த இடம். கோவில் எங்கு உள்ளது என்றால், திருப்பரங்குன்றம் பை பாஸ் ரோட்டில் தென் கண்மாய் தண்ணீர் செல்லும் மடை அருகில் கரையின் கிழக்கு பக்கம் கோவில் உள்ளது. பக்தர்கள் அங்கு சென்று வேண்டிக்கெ ண்டால் எப்படிப்பட்ட கர்மாவும் குறைய ஆரம்பிக்கும். ஏன் என்றால் சித்தர்கள் ஆன்மா ஜோதியில் கலந்த இடம் ஆற்றலுடன் அணுக்கூட்டம் நிறைந்து நிற்கும். அடிக்கடி நாம் அங்கு சென்று வந்தால் நினைத்த நினைவுகள், காரியங்கள் உடனே கை கூடும். மேற்கண்ட கோவில் இங்குள்ளதைப் பற்றி சுவாமிகளின் சில பக்தர்கள், தொண்டர்கள், அடியார்கள், கைங்கர்யதாரர்கள், தெய்வீக அன்பர்கள் மற்றும் பல ஊர் கிராம பொது மக்களும் அறியவில்லை. இதன் மூலம் தெரிந்து கொண்டு சென்று வந்தால் நற்செயல்கள் அனைத்தும் உடனே நிறைவேறும். என மாயாண்டி சுவாமிகள் பக்தர்கள் ஏராளமானோர் தெரிவித்தனர்.

– தகவல் சுவாமியின்
கைங்கர்ய தொண்டர் சேகர்

# மரணபயத்தை போக்கும் நீக்கும் மகா சித்தர்



கட்டிக் குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் மாயாண்டி சுவாமி கள் முதல் ஜீவ ஒடுக்கம் உள்ளது. இங்கு உள்ள தவசாலையில் தன் சீடர்க்கு உள்ளங்கையில் காசி ராமேஸ்வரம் தரிசிக்க வைத்து ஆயுள் விருத்தி செய்து பல்வேறு அற்புதங்கள் நிகழ்த்தினார். இதேபோல் இங்கு உள்ள தவசாலை முன்பு தை அமாவாசை, ஆடி அமாவாசை, புரட்டாசி மஹாலயம் அமாவாசை தினங்களில் சிறப்பு மகா யாகம் நடைபெற்று வருகிறது. இதில் யாக ஜூவாலையில் மகா சித்தரே ஜோதி வடிவில் தோன்றுவதாக பக்தர்களால் நம்பப்படுகிறது.

அன்றைய தினத்தில் தமிழகம் முழுவதும் ஏராளமான பக்தர்கள் பிணிகள் தீர்த்து மரணபயத்தை போக்கி ஆயுள் விருத்தி அடைய வேண்டி மகா யாகத்தில் கலந்து கொண்டுள்ளார். இதில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் நோய் குணமாகியும், திருமணம் தடை நீங்கியும், குழந்தை வரம் வேண்டி வருபவர்களுக்கும் கைமேல் பலன் கிடைத்ததாக இங்கு வரும் பக்தர்கள் இப்போதும் கூறுகின்றனர். அதேபோல் ஏராளமானோர் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் ஆசியால் அரசு வேலை கிடைக்க பெற்று உள்ளனர். இங்கு நடைபெறும்அன்னதான சேவைகளை அரசு வேலை பெற்றவர்கள் இன்றும் செய்து வருகின்றனர்.

# சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் அவதரித்த பட்டமான் இல்லம்



தவ திரு கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் பிறந்த பட்டமான் இல்லம் தற்போது சித்தர் அவதரித்த திருக்கோவிலாக உள்ளது. கருப்பனேந்தல் மடத்தில் உள்ள சித்தரின் முதல் ஜீவ ஒடுக்கமான தவச்சாலையை தரிசனம் செய்வதற்கு முன்பு சித்தர் பிறந்த இடமான இக்கோவிலுக்கு வந்து ஏராளமான பக்தர்கள் வழிபடுகின்றனர்.


இங்கு சித்தர்களின் திரு உருவ சிலைகள், ஓவியங்கள் கலைநய மிகத்துடன் தத்ருபமாக உள்ளது சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் காசி யாத்திரை சென்ற அரிய ஓவியமும் உள்ளது இங்கு சித்தரின் அவதார நட்சத்திரமான பூராடம், அமாவாசை, பவுர்ணமி தினங்களில் சிறப்பு வழிபாடு பூஜையும் நடைபெற்று வருகிறது. கருப்பனேந்தல் மடத்தில் சுவாமி தவக்கோலத்தில் இருந்த போது கட்டிக்குளத்தை சேர்ந்த ஓவியர் சித்தரின் அருளும் அனுமதியும் பெற்று வரைந்த ஓவியம் பல நூறு ஆண்டுகளாக இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சித்தரால் உருவாக்கப்பட்ட நவநீத பெருமாளும் தவச்சாலைக்குள் உள்ளது சித்தர் பிறந்த இந்த இடமான இக்கோவில் கருப்பனேந்தல் மடம் செல்லும் வழியில் உள்ளது





# தெய்வீக ஆற்றல் தரும் கருப்பனேந்தல் மடம்



கருப்பனேந்தல் மடம் தவச்சாலைக்கு சுவாமிகளின் முதல் ஜீவ ஒடுக்கம் அன்று முதல் இன்று வரை பல முனிவர்களும் ஞானிகளும் சித்தர்களும் சூட்சமாக வந்து செல்கின்றனர் அதுபோல வாழ்ந்து கொண்டிருக்கின்ற சித்தர்களும் ஞானிகளும் முனிவர்களும் இங்கு வந்து சுவாமிகளின் அருள் பெற்று செல்கின்றனர். இங்கு ஏராளமான அரசியல் முக்கிய பிரமுகர்கள், சினிமா நட்சத்திரங்கள் பலர் வந்து தியானம் செய்து மாயாண்டி சுவாமிகளை வழிபட்டு சென்று உள்ளனர்.

ஜூலை 18 ந்தேதி தமிழக மின்சார துறை அமைச்சர் சி.டி. நிர்மல் குமார் கருப்பனேந்தல் மடம் வருகை தந்து தவசாலையில் அமர்ந்து தியானம் செய்து வழிபாடு செய்தார். இங்கு தினமும் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

# ஞானம் தரும் மாயாண்டி சுவாமி சிஷ்யை பிராமணத்தி அம்மாள்

மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் வாழும் காலத்தில் திருநெல்வேலியில் இருந்து 21 வயது நிரம்பிய இளம் பெண்ணாக பிராமணத்தி அம்மாள் சுவாமிகளின் தவச்சாலை கருப்ப னேந்தல் மடத்திற்கு வருகிறார்கள்.

அங்கு சுவாமிகள் அமர்ந்திருக்கி றார்கள் தாயே என்னை நாடி வந்த காரணம் என்ன என்று கேட்கிறார் கள் நான் தங்களின் சீடராக வந்திருக்கி றேன் என்று பிராமணத்தி அம்மாள் சொல்லுகிறார். இந்த இள வயதில் ஏன் சாதுவாக வர வேண்டும் என்று சுவாமிகள் கேட்க,

உடனே அந்த அம்மா மொட்டை அடித்துக் கொண்டு கழுத்தில்உத்தி ராட்சம் அணிந்து காதையும் மூக்கை யும் கீறிக் கொண்டு வெள்ளைச் சேலை உடுத்தி கையில் தடியுடன் மாயாண்டிசுவாமியிடம் வந்து நிற்கி றார். சுவாமிகள் பரிபூரணமாக ஆசி வழங்கி சீடராக ஏற்றுக் கொள்கி றார்கள்.




ஜீவசமாதியான நிலையிலும், அந்த அம்மா கட்டிக்குளத்தில் வாழ்ந்த முன்னோர்களுக்கும் தற்சமயம் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு கலையும் கல்வியும் போதித்து கொண்டு இருக்கிறார்கள். அதற்கு உதாரணம் தான் கட்டிக் குளத்தில் இருக்கும் அனைவரும் கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள். ஊரில் உள்ள அனைத்து குடும்பங்களிலும் அரசு பதவியில் இருக்கிறார்கள் அதற்கு காரணம் ஞான சித்தர் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகளும், மகா சித்தர் மாயாண்டி சாமிகளும் அவர்கள் வழியில் வந்த ஜெயலட்சுமி என்ற பிராமணத்தி அம்மாள் என்பதனை மறுக்க முடியாத உண்மையாகும்.

அந்த அம்மாவின் பெயரை சொல்வதை விட பிராமணத்தி அம்மாள் என்று சொன்னால் நன்றாக தெரியும்.

**கலை மற்றும் உயர் கல்வியில் முதலிடம் பெற பிராமணத்தி அம்மாளை மனமுருகி வழிபாடு செய்து வருகின்றனர்.**



aanmeegamalar.com

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்


# கட்டிக்குளம் தவத்திரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்

# 169-ஆம் ஆண்டு ஆடிபூராடம் அவதார விழா

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை அருகே உள்ள கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டிசுவாமி தவசாலை கோவில் உள்ளது. இது சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்க ஸ்தல மாகும்.

இங்கு மாதந்தோறும் அமாவாசை பௌர்ணமி மற்றும் பூராடம் நட்சத் திரம் தின நாட்களில் சிறப்பு பூஜை கள் அபிஷேகம் அன்ன தானம் நடை பெறும்.

மேலும் தினந்தோறும் நித்ய அன்னதானமும் நடைபெறுகிறது.

ஆண்டு தோறும் ஆடி பூராடம் நட்சத்திர நாளில் அவதார விழா நடைபெறும். 169 ஆம் ஆண்டு அவதார விழா ஜூலை 28 ந்தேதி செவ்வாய் கிழமை நடைபெறுகிறது.

சூட்டுக்கோல் மாயாண்டிசுவாமி கள் தவ சாலை முன்பு காலை 7மணிக்கு சிறப்பு மகாயாகம் தொடங்குகிறது. அதை தொடர்ந்து சுவாமிக்கு பதினாறு வகையான மூலிகை கள் அபிஷேகம் விஷேச தீபாராதனை நடைபெறு கிறது.கட்டிக்குளம் கிராமத்தில் மகா சித்தர் மாயாண்டி சித்தர் பிறந்த பட்டமான் இல்லத்தில் சிறப்பு யாகமும் பூஜைகள் நடைபெறுகிறது.



கருப்பனேந்தல் மடம் தவச்சாலை யில் அமைந்துள்ள கட்டிக்குளம் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் முதலாவது ஜீவ ஒடுக்க மான இடத்தில் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி அவதாரவிழா சிவாச்சாரியார்களால் சிறப்பு வேள்வியாகமும் பூர்ணாஹூதி பூஜை, அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அன்னதான மும் நடைபெறுகிறது.

அன்று இரவு 8.00 மணிக்கு பூப்பல்லக்கில் கட்டிக்குளம் ஸ்ரீ சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி களின் ஐம்பொன் திருவுருவம் வீதி உலா நடைபெறுகிறது. விழாவில் மதுரை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இருந்தும் மற்றும் தமிழகத்தில் உள்ள ஏராளமான பக்தர்கள், சிவனடியார்கள் கலந்து கொள்வார்கள்.

அவதார விழா ஏற்பாடுகளை சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் முதலாவது ஜீவ ஒடுக்கமான இடம் பரம்பரை தர்மகர்த்தா மற் றும் விழா குழுவினர் கிராமப் பொதுமக்கள் செய்து வருகின்றனர்.

ஆலயத் தொடர்புக்கு:
8122141659, 9976519601




தவத்திரு மகாசித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தகோடி பெருமக்களை அன்புடன் அழைக்கிறோம்.

ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை

வாசுதேவன் பாத்திரக்கடை

முகவையின் மபெரும் பாத்திரக்கடை

வாசுதேவா என்றால் வளம் பொங்கும்! வாசுதேவன் பாத்திரத்தில் ராசி பொங்கும்!!



கல்யாண சீர்வரிசைக்கு தேவையான பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர், கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும் வாங்க கைராசியான நிறுவனம்

12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம் செல்: 88074 08807

# சூட்டுக் கோல் ராமலிங்க சுவாமிகள் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் சந்திக்கும் நிகழ்ச்சி



சூட்டுக் கோல் ராமலிங்க சுவாமிகள் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் சந்திக்கும் நிகழ்ச்சியாக வரும் கார்த்திகை நட் சத்திரம் நாளில் நடைபெறும் வீதிஉலா தமிழ் மாதந்தோறும் வரும்.

கார்த்திகை நட்சத்திர நாளில் கருப்ப னேந்தல் தண்டாயுதபாணி சுவாமி வீதிவலம் நிகழ்ச்சி நடைபெறுகிறது தெய்வீக சக்தி வாய்ந்த கருப்பனேந் தல் மடத்தில் உள்ள சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமியால் பிரதிஷ்டை செய்து அவர் வழிபாடு செய்து வந்த தண்டாயுதபாணி சுவாமி ஆண்டு தோறும் கார்த்திகை நட்சத்திர நாளில் இரவு மயில் வாகனத்தில் வீதியுலா நடைபெறுகிறது.

கிராமம் செழிக்க வேண்டியும், மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டியும் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகளின் உத்தரவு படி ஆண்டு தோறும் 13 கார்த்திகை நட்சத்திர நாளில் வலம் வரும் நிகழ்ச்சி இப்போதும் கட்டிக் குளத்தில் நடைபெறுகிறது.


இதில் தண்டாயுதபாணி சுவாமி வீதியுலாவின் போது சூட்டுக் கோல் ராமலிங்க சுவாமிகள் கோவில் முன்பு அங்குள்ள பூசாரி ராமலிங்க சுவாமிக்கு காட்டிவிட்டு கருப்பனேந்தேல் மடத்தில் இருந்து வரும் தண்டாயுதபாணி சுவாமிக்கு காண்பித்து பூசாரிகள் இருவரும் சேர்ந்து தீபாராதனை காட்டி

ஒருபிடி விபூதி ராமலிங்க சுவாமிகள் தட்டிலும் மற்றும் பூசாரி மகா சித்தர் மாயாண்டி சுவாமிகள் தவசாலையில் இருந்து வந்த தட்டிலும் விபூதி வைத்து வழிபாடு செய்வார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாதந்தோறும் குருநாதர் சூட்டுக் கோல் ராமலிங்க சுவாமிகளை அவருடைய சிஷ்யர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள் சந்திக்கும் நிகழ்ச்சியாக பக்தர்கள் கருதி ஏராளமான பக்தர்கள் கார்த்திகை நட்சத்திரம் நாளில் வழிபாடு செய்து வருகின்றனர்.



சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் சிறு வயதில் விளையாடிய திருவேட்டை ஐயனார் கோவில்



# சூட்டுக் கோல் இராமலிங்க சுவாமிகள் உருவாக்கிய நீர் ஊற்று விநாயகர்

கட்டிக்குளம் கண்மாய்க்குள் விநாயகர் ஏன் இங்கு இருக்கிறார் கட்டிக்குளம் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் இளைஞர்களுடன் அடிக்கடி கிட்டி விளையாடும் பழக்கம் உண்டு ஒரு நாள் மாலை நேரம் விளையாடிகொண்டு இருக்கும்போது போகையில் கட்டிக்குளம் நடு கண்மாய் வரை சென்று கொண்டு இருக்கிறார்கள் அப்போது மாலை வெயில் கடுமையாக அடித்துக் கொண்டிருக்கும் போது கிட்டி விளையாடும் இளைஞர்களுக்கு தண்ணீர் தாகம் எடுக்கிறது உடனே அவர்கள் சுவாமிகளை பார்த்து சாமி எங்களுக்கு தண்ணீர் வேண்டும் என்று சொன்னவுடனே சிறிது நேரம் ராமலிங்க சுவாமிகள் கண்ணை மூடிக்கொண்டு பூமியில் கிட்டி கம்பம் மூலம் கீறுகிறார் ஊற்று போல் பீறிட்டுக்கொண்டு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது அப்போது இளைஞர்கள் அனைவரும் பருகி விட்டவுடன் சுவாமிகளுக்கு கட்டிக்குளம் நாட்டின் இளைஞர்கள்



நன்றி சொல்லிக் கொள்கிறார்கள் அந்த இடத்தில் தான் கட்டிக்குளம் கண்மாய் நடுவே விநாயகப் பெருமான் அமர்ந்திருக்கிறார் அங்கு சென்று விநாயகப் பெருமானை வணங்கி விட்டு வந்தால் நினைத்தது நிறைவேறும் மேலும் இங்கு இருந்து தான் பங்குனி மாதம் நடைபெறும்.

பங்குனி உத்திரத்திற்கு பால்குடம் காவடிகள் எடுத்து வந்து பக்தர்கள் ராமலிங்க சுவாமி கோவிலுக்கு செலுத்துவார்கள் மேலும் ஆடி பௌர்ணமி அன்று திருப்பரங்குன்றம் திருக்கூடல் மலையிலிருந்து புறப்படக்கூடிய நவநீத பெருமாள் இன்றும் வந்து காட்டியந்தல் காடு என்ற சொல்ல கூடிய கட்டிக்குளம் கண்மாய் நடுவே உள்ள விநாயகப் பெருமான் கோவிலுக்கு இன்றும் வந்து திருக்கண் முடிந்து செல்லுகிறார் . மழை காலத்தில் கண்மாய் தண்ணீர்

விநாயகர் சிலையை சுற்றி இருக்கும். கரையில் இருந்தே

பக்தர்கள் வழிபாடு செய்து வருகின்றனர். சூட்டுக் கோல் இராமலிங்க சுவாமிகள் உருவாக்கிய நீர் ஊற்று தற்போது கிணறு வடிவில் இங்கு உள்ளது.






ஓடும் ரயிலை நிறுத்தி ஆங்கிலேய அதிகாரியை திகைக்க வைத்தவர், காசி - ராமேசுவரத்தை கையில் காண்பித்த மகான்

# கட்டிக் குளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள கட்டி குளம் பகுதியில் உள்ள திருவேட்டை அய்யனார் கோவில் பூசாரி யாக இருந்த குப்பமுத்து வேளார் இவருக்கு நீண்ட நாள்களாக குழந்தை இல்லாமல் இருந்தது ஒரு

நாள் குப்பமுத்து வேளாரும் மனைவி கூத்தாயி உடன் அங்கு உள்ள ராமலிங்க சுவாமி கோவிலில் நீண்ட நாள்களாக தங்களுக்கு குழந்தை இல்லாததை கூறி தங்களுக்கு தெய்வ குழந்தை வேண்டும் என்று மனமுருகி வேண்டினார். அதன் பலனாக 1858 ஆம் ஆண்டு ஆடி மாதம் பூராடம் நட்சத்திரத்தில் பூசாரி குப்பமுத்து கூத்தாயி தம்பதியர்க்கு அழகிய குழந்தை பிறந்தது அக்குழந்தைக்கு மாயாண்டி சுவாமி என பெயர் இட்டு வளர்த்தனர.

சாதாரண குழந்தையாக வளர்ந்த மாயாண்டி சுவாமி தன்னுடன் இருந்த தெய்வீக சக்தி வெளி உலகத்திற்கும் தந்தைக்கும் தெரிய ஆரம்பித்தது ஒரு நாள் குப்பமுத்து வேளார் தன் மகன் மாயாண்டி சுவாமியுடன் திருவேட்டை அய்யனார் கோவிலுக்கு பூஜை செய்த போது கோவில் முன்பு விளையாட சொல்லிவிட்டு பூஜை பணிகளை செய்து கெண்டு இருந்தார்.

அப்போது வெளியே விளையாடி கொண்டிருந்த மாயாண்டி சுவாமி கழுத்தில் நல்லபாம்பு சுற்றிக்கொண்டு இருந்தது வீதியில் சென்ற மக்கள் சிறுவன் மீது ஏறிய பாம்பை கண்டு அலரினார்கள் பூஜையை முடித்த குப்பமுத்து வேளாரும் மகன் மீது பாம்பு சுற்றியதை பார்த்து திகைத்து நின்றார் அடித்தால் கடித்து விடுமோ என்று பயந்து கூச்சல் போட்டனர் கூச்சலை கேட்டு திரும்பிய மாயாண்டி சுவாமி தன் மீது சுற்றி கொன்டிருந்த நல்லபாம்பை பார்த்து கொஞ்சம் இறங்கி போறிங்கலா நாகராஜா என கூறிய உடன் இறங்கி அருகில் உள்ள புதரில் சென்று மறைந்தது.

பாம்பை கண்டு பயந்த தந்தையிடம் தினமும் என் நன்பன் நாகராஜனிடம் விளையாடிக்கொண்டு இருந்தேன் என்று சிரித்த முகத்துடன் கூறினார்.

இதை போல் மாயாண்டி சுவாமி தாயார் வீட்டிற்கு முன்னால் நெல்லை அவித்து காய போட்டு பின் காக்கைகள், குருவிகள் வராமல் நெல் கதிர்களை பார்த்துக் கொள்ளும் படி கூறி விட்டு குளத்திற்கு சென்று விட்டார்.

அப்போது எராளமான பறவைகள் தானியங்களை சாப்பிட்டு கொண்டு இருந்தது இதை மகிழ்ச்சியுடன் பறவைகளை விரட்டாமல் பார்த்து கொண்டு இருப்பதை தாய் கூத்தாயி மகனிடம் கோவம் அடைந்தார்.

உடன் மாயாண்டி சுவாமி பறவைகளை மயக்கம் அடைய செய்யவா என கேட்ட போது, மகன் அறியாமல் கேட்கிறான் என நினைத்து தாயார் சரி என்கிறார்.

உடனே தியான நிலையில் அமர்ந்து பறவைகளை பார்த்து ஏதோ கூற பறவைகள் முழுவதும் மேலிருந்து விழ



ஆரம்பித்தது. பயந்த தாயார் கூத்தாயி பறவைகளை பறக்கவிடு நான் விளையாட்டாக கூறினேன். என்று கூறிய மறு நிமிடமே தாயின் கட்டளைபடி மாயாண்டி சுவாமி மயங்கிய பறவைகள் துள்ளி எழுந்து பறந்து சென்றது.

இப்போதும் கட்டிகுளம் மாயாண்டி சித்தரின் கருப்பனேந் தல் மடத்தில் கல்நடைகள் மேய்வதற்காக வயலும் தண்ணிர் தொட்டியும் உள்ளது. ஏராளமான பறவைகளும் வந்து செல்லுகின்றன. இப்போதும் மடத்தில் பல இடங்களில் குருவிகளின் கூடுகளை காணலாம் மாயாண்டி சுவாமி தினமும் மதுரை மற்றும் பல்வேறு இடங்களுக்கு சென்று ரயில் மூலம் மானா மதுரைக்கு வந்து கொண்டு இருந்தார்.

அப்போது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்த ஆங்கிலேய டிக்கெட் பரிசோதகர் குந்து காலிட்டு தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமியிடம் தலையில் பென்சிலால் தட்டி டிக்கெட் கேட்கிறார். கண் விழித்த மாயாண்டி சுவாமி சிரித்து விட்டு மீண்டும் தியான நிலைக்கு செல்கிறார். கோபம் அடைந்த அதிகாரி உதவியாளரை அழைத்து சிறிய ரயில் நிலையத்தில் நின்ற போது இறக்கி விடப்பட்டார்.

சிரித்த முகத்துடன் அருகில் இருந்த மரத்தின் கீழ் தியானத்தில் அமர்ந்தார். அவர் பயணம் செய்த ரயில் புறப்படவில்லை ரயில் நிலையத்தில் உள்ள பணியாளர்களும் ஏன் என்று திகைத்து கொண்டு இருந்தனர்.

பிற பெட்டிகளில் இருந்த பொது மக்கள் தியானத்தில் இருந்த மாயாண்டி சுவாமியிடம் காலில் விழுந்து ஆசி பெற்று சென்றனர். அப்போது சிலர் டிக்கெட் பரிசோதகரிடம் மகா சித்தர் மாயாண்டி சுவாமி பயணம் செய்தால் தான் ரயில் புறப்படும் என தெரிவித்தனர்.

பின் டிக்கெட் பரிசோதகர் சுவாமியிடம் மன்னிப்பு கேட்டு ரயிலில் பயணம் செய்யுமாறு கேட்டு அமர்வதற்க்கு இருக்கையும் ஏற்பாடு செய்கிறார். மாயாண்டி சுவாமி அமர்ந்தவுடன் ரயில் புறப்பட்டு மானா மதுரை செல்கிறது.

இதை அறிந்த ஏராளமன மக்கள்




சுவாமியை வரவேற்க திரண்டனர். அதே ரயிலில் ஆய்வு பணிக்காக ராமேஸ்வரம் வந்த ஆங்கிலேய உயர் அதிகாரி சுவாமியின் மகிமையைக் கண்டு உங்களுக்கு என்ன வேண்டும் என கேட்க இறைவனிடம் சரணாகதி ஆகும் என்னை போன்ற சாதுகளுக்கு இலவசமாக ரயில் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து வாய் மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, இப்போதும் சாதாரண பெட்டிகளில் சாதுக்கள் அகோரிகள் பயணம் செய்கின்றனர். டிக்கெட் பரிசோதகர்கள் ரயிலில் கிழே அமர்ந்து இருக்கும் காவி உடை அணிந்த முதியவர்களிடம் டிக்கெட் கேட்பதில்லை.

ஒருநாள் சுவாமிகள் மதுரைக்கு அருகே ஒரு சிறு கிராமத்தில் வசித்த பிராமணத்துக் தம்பதியினரின் இல்லத்திற்குள் திடீரென நுழைந்தார். அத்தம்பதியினரிடம், “உங்களுக்குப் பத்தாவதாக ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது. அதற்குச் சுப்பிரமணி என்று பெயர்வை.

ஆனால் அவன் சில காலம் மட்டும் உங்களுடன் இருப்பான். பின்னர் அவனை இந்த உலகமே கொண்டாடும்” என்று ஆசி வழங்கினார். அதன்படி பிறந்த சுப்பிரமணிதான் பின்னர் சுவாமிகளிடம் தீட்சை பெற்று ‘சாந்தானந்த சுவாமிகள்’ ஆனார். சேலம் புதுக்கோட்டை போன்ற இடங்களில் உள்ள ‘ஸ்கந்தாஸ்ரமம்’ அமைத்துப் பக்தர்களின் குறைகளைத் தீர்த்தார்.

ஒருமுறை சுவாமிகள் நாகப்பட்டினம் சென்றிருந்தார். சுவாமிகளைத் தரிசித்துத் திருநீறு பெறுவதற்காகப் பெரும் கூட்டம் கூடியிருந்தது. அப்போது ஒரு சிறுவன் திருநீறு வாங்குவதற்காக நீட்டிய கையைத் தொட்டதும் சுவாமிகள் மகிழ்ச்சியுடன் “நீ யோகக்காரனப்பா! உன் பேச்சைக் கேட்கப் பணத்தைக் கொட்டிக் கொடுப்பார்கள்.

அதனைக் கொண்டு ஏராளமான ஆலயங்களுக்குத் திருப்பணிகள் செய்யும் யோகமும் உனக்கு இருக்கிறது” என்று கூறி ஆசிர்வதித்தார். அந்தச் சிறுவன்தான் பின்னாளில் திருமுருகக் கிருபானந்தவாரியார் சுவாமிகள் எனப் புகழ் பெற்றார். சுவாமிகள் கூறியபடி சுமார் நாற்பது திருத்தலங்களுக்குத் திருப்பணிகளும் செய்தார்.

மதுரை வடக்கு மாசி வீதியில் உள்ள இருளப்ப கோனாருக்கு ஜாதகம் பார்த்ததில் இளமையில் ஆயுள் முடிந்து விடும் என்று கூறி காசி ராமேஸ்வரம் சென்று வந்தால் ஆயுள் விருத்தியாகும் என ஜாதகம் ரீதியாக தெரிந்து கொண்டனர்.

பெற்றோரை விட்டு காசி ராமேஸ்வரம் செல்ல முடியாமல் மதுரை கோரிப்பளையம் வரும் மாயாண்டி சுவாமியை சந்திக்க மக்களோடு மக்களாக இருக்கிறார். அப்போது மாயாண்டி சுவாமி தனது சூட்டுகோலால் கையை நீட்டி, “இருளப்ப கோனார் இங்கே வா, என்ன அப்பு ஆயுள் விருத்தி பண்ணனுமா? உன் குடும்பம் விருத்தி ஆக வேண் டுமா?” என கூறிய உடன், தன்னைபற்றி முன்பின் எதுவும் தெரியாமல் அழைத்த மாயாண்டி சுவாமியின் மகிமையை பார்த்து பக்தியுடன் அவரை வணங்கி சுவாமியுடன் கட்டிகுளம் கருப்பனேந்தல் மடம் வந்து சேர்கின்றனர்.

பின்பு மடத்தில் நாற்பத்து எட்டு நாட்கள் அன்ன ஆகாரமின்றி தவ சாலையில் மாயாண்டி சுவாமி தியானம் செய்தார். நாற்பத்து எட்டு நாட்களுக்கு பின்பு, இருளப்ப கோனாரைப் பார்த்து “உன் கட்டைக்கு அழிவு இல்லை உன் குடும்பம் விருத்தியாகும்“ எனக் கூறி தன் உள்ளங்கையில் காசிவிஸ்வநாதரையும் ராமேஸ் வரம் ராமநாதசுவாமியை காண்பித்து போய் வா என்கிறார்.

அதன் பின் தன் ஜீவ ஒடுக்கமான கட்டிகுளம் கருப்பனேந்தல் மடம் தவச்சாலைக்கு வரு வோருக்கு காசிராமேஸ்வரம் சென்று வந்த புண்ணியம் கிடைக்கும் என்று பக்தர்களால் நம்பப்படுகிறது.

இது பற்றி மடத்தில் அன்னதானம் சேவைகளை செய்யும் பக்தர் கட்டிகுளத்தை சேர்ந்த சேகர் கூறியதாவது:–

கட்டிகுளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் ஏராளமான ஆன்மீக அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார். இங்கு இப்போதும் பசி என்று வருவோருக்கு அன்னதானமும் ஆண்டு தோரும் ஆடி மாதத்தில் அவதார விழாவும் நடைபெறுகிறது.

இப்போதும் ஏராளமான வீடுகளில் சித்தர் அனுமதியுடன் வரையப்பட்ட திருஉருவ படத் தின் முன்பு வேண்டுபவருக்கு பல்வேறு ஆன் மீக அதிசயங்களை நிகழ்த்திவருகிறார். மாயாண்டி சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கம் தான்பிறந்த கட்டி குளம் கருப்பனேந்தல் மடமும் திருப்பரங்குன்றம், திருகூடல் மலை நவ திருப்பதியில் ஒன்றான ஆழ்வார் திருநகரி, மன்னார்குடி மற்றும் பர்மா ஆகிய இடங்களிள் ஜீவ ஒடுக்கமானார்.

அவர் கையினால் செய்த பள்ளி கொண்ட பெருமாள் கருப்பனேந்தல் மடத்தில் இன்றும் உள்ளது பக்தர்களின் மன குறையை முன்பே அறிந்து தீர்க்கும் மாகா சக்தியாக சூட்டுகோல் மாயாண்டி சுவாமி சித்தர் உள்ளார் என அவர் தெரிவித்தார்.





உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், சமய நிகழ்வுகள் போன்றவற்றை

இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்

தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!

தொடர்ப்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203





கட்டிக்குளம் தவத்திரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி

169வது அவதார விழாவை காண வருகைதரும் அனைத்து பக்தர்களையும் அன்புடன் அழைக்கிறோம்

என்றும் - இறை - பணியில்

A.K.K CONSTRUCTION

A.K.Karthickraja B.Archt, R.HariniSree BBACRM, K.Surendhar M.com (CA), K.Divya B.A.,B.Ed., Kattikulam (live) Madurai,

P.ஆறுமுகம் ராஜா டிரேடிங் மானாமதுரை

குமரேசன் சிவகணேஷ் ஃபயர்வுட் கட்டிக்குளம்


aanmeegamalar.com

# சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளின் அற்புதங்கள்



மாயாண்டி சுவாமிகள் தன் கையால் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்த விநாயகர்



மாயாண்டி சுவாமிகள் பிரதிஷ்டை செய்த முருகன் சிலை



தவச்சாலையில் சித்தர்கள் வேள்வி முறைப்படி யாகம் செய்யும் பனையபட்டி ஞானிபுல்லான்சாதுசுவாமி கோவில் தவதிரு செழியன் சுவாமி



அன்னதானகூடம்

மதுரை வடக்கு மாசி வீதியைச் சேர்ந்த தவதிரு இருளப்ப கோனார் தனது இருபத்தி ஆறாம் வயதில் ஆயுள் முடியும் என்றும் அதற்க்கு காசி ராமேஸ்வரம் சென்று பரிகாரம் செய்தால் ஆயுள் கூடும் என்று ஜோதிடத்தின் மூலம் அறிந்தார் இதனை தெரிந்த சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்திற்க்கு அழைத்து சென்று ஒரு மண்டலம் தவச்சாலைக்குள் சென்று தவ நிலை அடைந்தார் அப்போது தவச்சாலை மேல் பலகைகள் போட்டு மூடப்பட்டு இருந்தது 48 நாட்களுக்கு பிறகு அங்கு தவ நிலையிலையே இருளப்ப கோனாருக்கு உள்ளங்கையில் காசி, ராமேஸ்வரம் கோவில்களை காண்பித்து இனி எத்துன்பமும் இல்லை எனக் கூறி அருள் ஆசி வழங்கினார். தன் சீடரின் இறப்பு நிலையை தானே ஏற்று தன் அருளால் அதனை போக்கி ஆயுள் நீட்டித்து பல அற்புதங்கள் புரிந்தார்.

மார்நாடு கண்மாய் கரையில் யாருக்கும் தெரியாமல் சிவன், அம்மன் கோவிலும் மண் மூடி புதைந்து இருந்தது இதனை அறிந்த சுவாமிகள் அவ்வூர் மக்களுக்கு தெரிய படுத்திய போது சுவாமி கூறிய இடத்தில் மணல் மேடுகளை அகற்றிய போது சிவன் கோவில் தென்பட்டது.

அதன் பின் சுவாமி அருள் வாக்கின் படி கோவி லை சீரமைத்து கும்பாபிஷேகம் நடத்தப் பட்டு இப்போதும் பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்





ஒரு முறை நாகப்பட்டினத்தில் திருமுருக கிருபானந்தவாரியாரை சந்தித்த போது சுவாமிகள் வாரியாரை பார்த்து உன் பேச்சை பணம் கொடுத்து கேப்பாங்க உன் சொற் பொழிவை கேக்க ஏராளமானோர் கூடுவார்கள் ஆன்மீக பணியில் உன் தொண்டு உலகத்திற்கே இன்றி அமையாதது பல தொண்டுகள் செய்



அப்பு என்று ஆசி வழங்கினார்.

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் மாயமாய் மறையக்கூடிய தன்மை பெற்றவர் ஒரே நாளில் ஒரே நேரத்தில் பர்மா உட்பட தமிழகத்தில் பல்வேறு ஊர்களில் காட்சி அளிக்கும் வல்லமை பெற்றவர் என பக்தர்களால் கூறப்படுகிறது. கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்தில் அமாவாசை, பவுர்ணமி அன்று நடத்தப்படும் யாக வேள்வியில் ஜோதி ரூபமாக பக்தர்களுக்கு காட்சி தருகிறார் இதை பார்த்த ஏராளமான பக்தர்கள் தங்களது செல்போனில் போட்டோ மற் றும் வீடியோவாக எடுத்து வைத்து வழிபடுகின்றனர்.

சுவாமிகள் தான் செல்லும்இடங்களில் எல்லாம் கல்லிலும் முள்ளிளும் கற்றாழை செடியிலும் படுத்துக் கொண்டு பக்தர்களுக்கு ஆசி வழங்கினார் அவர் சென்ற இடங்களில் எல்லாம் முள் படுக்கையே விரும்பினார் அப்போது கூறும் அருள் வாக்கினால் ஏராளமான பக்தர்கள் நல்ஆசி பெற்று நற்பயன் அடைந்த தாகவும் பக்தர்களால் கூறப்படுகிறது. அவர் சென்ற இடங்களில் எல்லாம் தற்போது அன்னதான மடங்களாக உள்ளது.

சித்தரின் ஜீவ சமாதி திருப்பரங்குன்றம் திருகூடல் மலையில் உள்ளது இங்கு ஆண்டு தோறும் குருபூசை விழா நடைபெறும்.

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளால் நிறுவப்பட்ட நவநீத பெருமாள் ஆடி பவுர்ணமி பெரு விழா வரும் ஜூலை மாதம் 29 ம் தேதி தொடங்கி சுமார் 25 ஊர்களில் வலம் வந்து வரும் ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி திருகூடல் மலைக்கு வந்து சேருகிறது சுமார் 24 நாட்கள் நவநீத பெருமாள் வலம் வரும் போது ஏராளமான பக்தர்கள் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகளே நேரடியாக தங்கள் ஊர்களுக்கு வருவதாக வணங்கி வரவேற்பு கொடுப்பார்கள்.


## கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் மடத்தில் கருங்கல் கட்டுமான திருப்பணிகள்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள் ளது கட்டிக்குளம் இங்கு உள்ள கருப்பனேந்தேல் மடத்தில் மகா சித்தர் மாயாண்டி சுவாமிகளால் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்த விநாயகர் கோவில் தற்போது கருங்கல் திருப்பணி செய்து முடிவு பெற்று உள்ளது. அதேபோல் அவர் வழிபாடு செய்த தண்டாயுதபாணி சுவாமி சன்னதி கருங்கல் திருப்பணி வேலை நடைபெற்று வருகிறது.

விநாயகர் கோவில் கருங்கல்திருப் பணிகள் மாயாண்டி சுவாமிகள் ஆசியுடன் நிறைவடையும் நிலை உள்ளது. இதில் கருங்கல் திருப்பணி வேலைகள் பூர்வாங்க பூஜை கள் நடத்தப்பட்டு ஜேசிபி எந்திரம் மூலம் கருங்கல் கட்டுமான தொடங்கி உள்ளது. இப்பணி நிறைவு பெற்றபின் தவ சாலை



தியான மண்டபம்,மற்றும் இங்கு உள்ள சிலம்பு ஸ்வாமி, பிராம ணத்திஅம்மா தனி சன்னதியும், அதை தொடர்ந்து தோரண வாயில் சால் கோபுரம், பக்தர்கள் தங்கி செல்ல மண்டபம் வசதி போன்ற திருப் பணிகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. பக்தர்களும் இப்பணியில் பங்கு பெறலாம்.



## மாயாண்டி சுவாமிக்கு பூஜைகள் அன்னதானம் செய்து வந்த சித்தர்கள்

மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள் ஜீவ ஒடுக்கமான கருப்ப னேந்தல் மடத்தில் தொடர்ந்து சுவாமிக்கு பூஜைகள் மற்றும் அன்னதானம் செய்து மகா சித்தரை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு அருளாசி வழங்கி வந்த தவத்திரு சிலம்பு சுவாமி என்ற முத்துராமலிங்க சுவாமி, பொன்னியம்மாள் ஜீவசமாதி கருப்பனேந்தல் மடத்தில் உள்ளது. இங்கு வந்து பக்தர்கள் வழிபாடு செய்து செல்கின்றனர்.

தவத்திரு மகாசித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி அவதார விழாவிற்கு வருகை தரும் பக்தகோடி பெருமக்களை அன்புடன் அழைக்கிறோம்.

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை..! ஸ்ரீ சோணையா துணை..! ஸ்ரீ பழனி ஆண்டவர் துணை..!

K.சாமி

பந்தல் & டெண்ட் ஒர்க்ஸ்

எங்களிடம் பந்தல் டெக்கரேசன், அரேபியன் , சாமியான பந்தல் ,
ஜீமர் பந்தல் ,மேடைசேர், டேபிள், ரெட் மேட் , டேபிள் கவர் ,சேர் கவர்

வாடகைக்கு கிடைக்கும்...



மகாராஜா நகர் தாயமங்கலம் ரோடு மானாமதுரை

தொடர்புக்கு
9842595606/9585752710

**கருப்பனேந்தல் மடம் செல்வோம் கவலைகளை தீர்ப்போம்**

நல்லது நடக்கும்! நல்லதே நடக்கட்டும்!!

# கட்டிக்குளம் தவத்திரு சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி

## 169வது அவதார விழா

காண வருகைதரும் அனைத்து பக்தர்களையும் **அன்புடன் அழைக்கிறோம்**



**என்றும் இறை பணியில்**

த.ரெத்னம் MA சிங்கம்புணரி. K.ஆதவன் சிங்கம்புணரி V. சரவணன் ஆரோக்யா பால் சிங்கம்புணரி
S.சந்திரமோகன் BA. BL கட்டிக்குளம் (இ) திருப்பூர் R.முருகேசன் ராணுவம் கட்டிக்குளம் (இ) திருப்புவனம்
V.அழகுராஜா A@S கன்ஸ்ட்ரக்ஷன் பில்டர்ஸ் வையாபுரி A.கர்ணன் தீயணைப்புத்துறை கட்டிக்குளம்
B.சௌமியநாராயணன் இராணுவம் கட்டிக்குளம் M.பாலமுருகன் கட்டிக்குளம்
K. கமலம் பூங்கோதை சிவகங்கை S.கருணாநிதி காவல்துறை S.V மங்கலம்
S.சரவணன் கட்டிக்குளம் (இ) கோவை, ச.இளையராஜா சிறைதுறை கட்டிக்குளம், (இ) திருப்பத்தூர்,
G. சக்திவேல் கட்டிக்குளம், R.அழகர் TNSTC நடத்துநர் கட்டிக்குளம்

**தவத்திரு மாயாண்டி சுவாமிகள் தொண்டர்குழு, கட்டிக்குளம்**

K.முருகன் கட்டிக்குளம், K.கண்ணன் கட்டிக்குளம், L.ராமலிங்கம் கட்டிக்குளம், V.விஜயன் கட்டிக்குளம்,
V.வீரக்குமார் கட்டிக்குளம், A.செந்தில்வேல் கட்டிக்குளம், K.திருக்கண்ணன் கட்டிக்குளம், K.கோபு கட்டிக்குளம்,
M.கண்ணன் கட்டிக்குளம், G.இரவி சீனிமடை,

ஆ.ரா.காளிமுத்து - பாண்டியம்மாள் மேலவீட்டார், கட்டிக்குளம்,

**தொண்டர்கள் குழு மற்றும் கட்டிக்குளம் கிராம பொது மக்கள்**


aanmeegamalar.com

# காசி ராமேஸ்வரத்தை உள்ளங்கையில் காண்பித்து சீடரின் ஆயுளை நீட்டிக்க செய்த கட்டிக் குளம் மகா சித்தர்



திருப்பரங்குன்றம் திருகூடல்மலை கைங்கர்யதார்கள் இருளப்பக் கோனாரை சுவாமிகள் கருப்பனேந்தல் தவச்சாலைக்கு ஏன் கூட்டி வந்தார் தெரியுமா, சீடனின் மரண தேதியை மாற்றியமைத்த இடம்.

எமன் ஏமாந்து சென்ற இடம் ஞானபீடமான கருப்பனேந்தல், கருபனேந்தல் மடத்திற்கு ஸ்வாமிகளுக்கு முன் காலத்திலேயே திருச்சி திருவரங்கம் கோவிலில் ஸ்ரீ ராமானுஜர் பூத உடல் ஆயிரம் ஆண்டுகளுக்குபிறகும் இன்று உள்ளது. அதேபோல் கட்டிக் குளம் மகா சித்தர் முதல் ஜீவ ஒடுக்கம் கருப்பனேந்தல் தவசாலை உள்ளது.


அவர் கருப்பனேந்தல் மடத்திற்கு வந்து தவச்சாலை உள்ள இடத்தில் தவம் இருந்து சென்று உள்ளார் அதன்பின் சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகள் அகத்தியரிடம் தீட்சை வாங்கிக் கொண்டு பல ஊர்களிலிருந்து வாசம் செய்து இறுதியாக கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடம் தவச்சாலையில் தங்கி இருக்கிறார்.

பல மாதங்களுக்கு பிறகுகட்டிக் குளம் கிராம பொதுமக்கள் மேளதாளத்துடன் சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகளை அழைத்து சென்று தற்போது கோவில் இருக்கும் இடத்தில் அமர வைத்து சென்றனர் அந்த இடத்தை சுவாமிகளே தேர்ந்தெடுக்கிறார்.

மதுரையில் வடக்குமாசி வீதி இருளப்பக்கோனாரை சுவாமிகள் ஆயுள் விருத்தி செய்வதற்காக கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடத்திற்கு அழைத்து வருகிறார் முக்கியமாக பார்க்க வேண்டியது என்னவென்றால் மதுரைக்குள்ளும் மதுரையை சுற்றியும் புகழ் வாய்ந்த சிறப்பு வாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க கோவிலும் தெய்வீக ஆற்றல் உள்ள இடங்களும் இருக்கிறது அது போல மாயாண்டி சுவாமிகளால் ஏற்படுத்தபட்ட 150 மடங்களுக்கு மேல் உள்ளது அங்கெல்லாம் அழைத்து செல்லாமல் கட்டிக்குளம் தவச்சாலை கருப்பனேந்தல் மடத்திற்கு அழைத்து வருகிறார் அங்கு இருளப்ப கோனாருக்காக சுவாமிகள் யோக சமாதி அதாவது ஜுவ ஒடுக்கமாகும் போது என்னுடைய ஆதி குருநாதர் சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகள் அமர்ந்த இடம் நோக்கி இருளப்ப கோனாருக்காக அமர்கிறேன் என்ற சொல்லி பூமிக்கடியில் அமர்கிறார் இதை வைத்து பார்க்கும் போது இராமலிங்க சுவாமிகள் கருப்பனேந்தல் மடத்தில் மக்களுக்கு ஆசிர்வாதம் செய்து கொண்டு இருந்தார் என்பது உறுதியாகிறது. என பக்தர்களால் கூறப்படுகிறது.

– தகவல், சுவாமியின் கைங்கர்ய தொண்டர் சேகர்

# தவச்சாலையின் முன்பு நடைபெறும் சித்தர் வேள்வியின் மகிமை



கட்டிக் குளம் சூட்டுக் கோல் சுவாமி ஒரு மண்டலம் தவம் இருந்து தன் சீடர்க்கு உள்ளங்கையில் காசி ராமேஸ்வரம் கோவில்களை காண்பித்து தரிசிக்க செய்த தவசாலை மகிமை பற்றி ஞானிபுல்லான் சுவாமி சாது கூறியிருப்பதாவது

நீர்யாரைதேடுகிறய்.

வாய் மவுணம் இருக்காதே.

நாணம்பேசாதே.

மவுனம் என்றால் பேசாமல்

இருப்பது அல்ல.

நண்டுகப்பேசு.

உள்மணம் அமைதி

பெறவேண்டும்.

இது தான்மவுணம்.

இதுதான்தவம் வாய் மனம். திரந்தால் வரம்பெரலாம் என கூறியுள்ளார். கட்டிக் குளம் மாகசித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகள் வாழ்ந்த கருப்பனேந்தேல் மடம் தவசாலையில் உலக நன்மைக்காக ஆண்டு தோறும் சித்தர்கள் எப்படி யாகம் நடத்தினார்களோ அதேபோல் இங்கு உள்ள தவச்சாலை முன்பு பனையபட்டி ஞானிபுல்லான் சாது சுவாமி கோவில் தவதிரு செழியன் சுவாமிகள் சித்தர் வேள்வி முறைப்படி நடத்தி வருகிறார்.

அப்போது இரண்டு ஆள் உயர அளவிற்க்கு ஏற்படும் தீ ஜூவாலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மகா சித்தர் சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமிகளை தரிசனம் செய்கின்றனர். ஆண்டுக்கு மூன்று முறை இரவில் கருப்பனேந்தல் மடம் தவசாலையில் நடைபெறுகிறது.


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம் ஓடு வியாபாரம் & சாமில்

SAK சீனியப்பா குரூப்ஸ் SAK





எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.



S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256

SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்

சீனியப்பா லாட்ஜ் A/C

SAK திருமண ஹால்



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256

172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,

9842868256

